என்று எனக்குத் தெரியவில்லை. வியாபாரிகளிடத்திலே கிடைக்கிற நெல்லைத்தான் வாங்குகிறார்கள். விவசாயிகளிடத்திலே கிடைக்கிற நெல்லை வாங்குவது இல்லை என்ற குற்றச்சாட்டிற்கு ஆதாரமே இல்லை. எந்த நிலையங்களிலே அவர்கள் விவசாயிகளிடம் இருந்து வரும் நெல்லை வாங்க மறுக்கிறார்கள் என்று தெரிவித்தால் அந்த நிலையத்தில் இருப்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(திருவாளர்கள் க. சுப்பு, ரெ. வீ. சவுந்திரராஜன், இரெ. இராசமாணிக்கம், கோ. இளங்கோவன் முதலியவர்கள் எழுந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கேள்வியாக இருந்தாலும் முன் வரிசையிலே இருக்கக்கூடிய அத்தனை பேர்களும் கேட்டுவிட்டார்கள். தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவருக்கு வாய்ப்பு அளிக்க வேண்டாமா? வில்லிவாக்கம் உறுப்பினர் அமரலாம்.

திரு. க. சுப்பு : நெல் தஞ்சாவூரிலே விளைந்தாலும் எல்லோரும் தான் சாப்பிடுகிறோம்.

சென்னை பிற்பட்ட மாணவர்களுக்கான தனிப்பயிற்சி நிலையக் கட்டிடம்.

*வினா 46—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலுள்ள ஸ்பெஷல்-டிரெயினிங் சென்டர்க்கு, நிரந்தரக் கட்டிடம் கட்டவும், அங்கு பயிலும் மாணவர்களுக்கு விடுதி கட்டவும், திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கு, எப்பொழுது?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட் : (அ) சென்னையிலுள்ள பிற்பட்டோருக்கான தனிப் பயிற்சி நிலையத்திற்கு, நிரந்தரக் கட்டிடம் கட்டும் செயற் குறிப்பு பரிசீலனையில் இருந்து வருகிறது.

(ஆ) எங்கு, எப்பொழுது என்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

திரு. ரா. கு. பெருமாள் : தலைவரவர்களே, சென்னையில் பிற்பட்ட மாணவர்கள் நல விடுதியில் தங்கிப் படிப்பதற்கு மாணவர்களுக்குக் கட்டிட வசதி இல்லாமல் மிகவும் சிரமப்

[1979 அக்டோபர் 31

படுகிறார்கள். அதே நேரத்திலே இரண்டு கண்களும் தெரியாத மாணவர்கள் பிரசிடென்சி கல்லூரியில் தங்கிப் படித்துவிட்டு தங்குவதற்கு இடம் இல்லாமல் மழையில் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு இடம் அளிக்கும் வகையில், எஸ்டேட் ஆபீஸ் உட்புறத்தில், எம்.எல்.ஏ. ஹாஸ்டல் உட்புறத்திலே பிற்பட்ட மாணவர்கள் தங்கியிருக்க விடுதி கட்டிக் கொடுப்பதை அரசு பரிசீலிக்குமா?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு தலைவரவர்களே, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கட்டிடம் கட்டவும், விடுதிகள் கட்டவும் அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. எங்கே, எப்பொழுது கட்டுவது என்பதை ஆராய்ந்து கொண்டிருக்கிறது அரசு. விரைவிலே முடிவு செய்யப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிக்கு பக்கத்திலே ஒரு இடத்தைக் குறிப்பிட்டு, அங்கே கட்டலாம் என்று சொல்லி இருக்கிறார். அதைப் பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. தீ. சு. நல்லதம்பி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் கட்டிடம் கட்டுவது பரிசீலனையில் உள்ளதாக சொல்கிறார். 2, 3 ஆண்டுகளாக இப்படித்தான் சொல்லி வருகிறார். பரிசீலனை எப்பொழுது முடிவாகும்?

மாண்புமிகு திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, 2, 3 ஆண்டுகளாக இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்வது தவறு. இதுவே இப்பொழுதுதான் அரசினுடைய பரிசீலனைக்கு வந்திருக்கிறது.

ஒன்றிய அளவில் தொழிற்பயிற்சி நிலையங்கள்.

*வினா 47—திரு. கே. சௌந்திரராசன்: மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி சுய வேலை வாய்ப்பை உருவாக்கும் வகையில் தொழிற்பயிற்சி நிலையங்களை ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்துக்கும் உருவாக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: புதிதாக ஒரு தொழிற்பயிற்சி நிலையம் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை.